கருணை இல்லங்கள்.

* 163 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில், அனாதைச் சிறுவர்களுக்கென ஆலயங்களில் நடத்தப்படும் கருணை இல்லங்கள் எத்தனை ?

(இ) அவைகளில் 1—2—1979 நாளன்றைய நிலவரப்படி உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ? தற்போதுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(உ) தொடக்க காலத்தில் அவ்வில்லங்களுக்கு அரசு எத்தனை சதவீதம் மானியம் அளித்து வந்தது ?

(எ) தற்போது எத்தனை சதவீதம் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) தமிழ் நாட்டில் அனாதைச் சிறுவர்களுக்கென அரசின் உதவியோடு ஆலயங்களின் சார்பாக நடத்தப்படும் அன்பு இல்லங்கள் 36 உள்ளன. இவற்றுள் 26 அன்பு இல்லங்கள் சிறுவர் களுக்காகவும், 10 அன்பு இல்லங்கள் சிறுமியர்களுக்காகவும் நடத்தப் படுகின்றன. இதைத்தவிர ஆலயங்களின் முழு நிதி உதவியால் 7 அன்பு இல்லங்கள் சிறுவர்களுக்காக நடத்தப்படுகின்றன.

(இ) 1—2—1979 ஆம் நாள் நிலவரப்படி 1,293 சிறுவர்களும், 465 சிறுமியர்களும் இருந்தனர். தற்பொழுது 28—2—1981 அன்று 1,057 சிறுவர் களும், 307 சிறுமியர்களும் மேற்படி அன்பு இல்லத்தில் உள்ளனர்.

(உ) & (எ) அன்பு இல்லங்கள் தொடங்கிய காலத்திலிருந்து தற்பொழுது வரை அவற்றின் மொத்தச் செலவில் 25 விழுக்காடு அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, கருணை இல்லங்களைப் பற்றிக் கேட்டிருந்தேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்பு இல்லங்களைப்பற்றிச் சொல்கின்றார்கள். அந்தப் பெயர் மாற்றம் எப்போது ஏற்பட்டது ? எதற்காக ஏற்பட்டது ? ஏற்கெனவே இருந்த மாணவர்களைவிட இப்போது குறைவாக இருக்கின்றதே, அதற்குரிய காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 25]

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, கருணை இல்லங்கள் என்று இருந்த பெயர் அன்பு இல்லங்கள் என்று மாற்றப் பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் கருணை இல்லங்கள் என்று பெயர் வருகிறபோது, அது கருணையின் அடிப்படையிலே ஏற்படுமானால், அந்தக் கருணைக்கு எப்படி விதிமுறைகளை வகுப்பது என்பதிலே சிக்கல்கள் வரலாமென்று கருதித்தான் அன்பு என்ற அடிப்படையிலே, எல்லோரிடமும் அன்பு செலுத்துகின்ற இல்லங்கள் என்று மாற்றலாம் என்ற அளவிலே மாற்றப்பட்டிருக்கிறது. மாணவர்கள் குறைந்ததற்குக் காரணம் அதற்குப் பிறகு அதிலே குழந்தைகள் சேர வரவில்லை என்றுதான் அதிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, கருணை இல்லங்கள் தொடங்கப்பட்ட காலத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் என்ன? அவை அன்பு இல்லங்கள் என மாற்றப்பட்ட காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கருணை இல்லங்கள் என்று அவர்கள் கேள்வி கேட்டிருந்தாலும்கூட, கேட்டிருக்கின்ற கேள்வி அதிலே எத்தனை குழந்தைகள் படிக்கிறார்கள் என்பதுதான். அதற்குத்தான் பதில் தயாரிக்கப்பட்டு தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். அதை ஏன் மாற்ற வேண்டுமென்று கேட்கின்றார்கள். அதை ஒரு தனிக் கேள்வியாகக் கேட்டால், அதற்கு வேறு காரணங்கள் இருந்தால், அதைத் தெரிந்து அவைக்குத் தெரிவிக்க வசதியாக இருக்கும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : எந்த அடிப்படையிலே, அனாதைக் குழந்தைகள் இந்த அன்பு இல்லங்களில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, ஆதரவு அற்றவர்கள், தாய் தந்தை அற்றவர்கள், ஊனமுற்றவர்கள், இப்படி பராமரிப்பதற்கு ஆள் இல்லாதவர்கள் என்ற வகையிலே பரிசீலிக்கப்பட்டு சேர்க்கப்படுகிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தற்போது அதிலே பயனடையும் மாணவர் களுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதன் காரணம் அது பழைய நிலையிலே பராமரிக்கப்படாமல் இருக்கின்றது. அந்த அளவுக்கு கவனிப்பாரற்று பெயரளவுக்கு இருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி அரசு என்ன சொல்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அது ஆரம்பிக்கப்படுகிறபோது, தக்க திட்டங்களோடு அதற்கான நிதி ஆதாரங்கள் எவ்வளவு தேவைப்படும் என்பதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் 'அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தது' என்பதுபோல ஆரம்பத்திலே செய்திருக்கிறார்கள். அதன் விளைவாக அந்த நிறுவனங்களை பின்னாலே நடத்துவதிலே பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு குழந்தைக்கு ரூபாய் 50 என்று திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு மேலும் இப்போது செலவுகள் வளர்ந்துகொண்டு வருகின்றன. ஆகவேதான் அதைச் செம்மையாகவும், முறையாகவும் நடத்தி, குழந்தைகளை ஒழுங்காகப் பாதுகாக்க வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே சேர்ந்திருக்கின்ற குழந்தைகளைச் செம்மையாகப் பாதுகாத்து மேலும் அதை வளர்ப்பதிலே அக்கறை செலுத்த வேண்டும் என்று அறநிலையத் துறை விரும்புகிறது.

Funds of Temples and Hindu Religious Trusts

* 164 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state the total amount of funds drawn from various Temples and Hindu Religious Trusts in the State from the year 1967 up to 30th June 1980, for running Orphanages for Students, Beggar Homes and other Educational and Social Welfare Institutions?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்களால் நடத்தப்படும், பரிவு இல்லங்கள், அன்பு இல்லங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள், குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம் மற்றும் இதர சமூக பணிகளுக்காக 1967 ஆம் ஆண்டு முதல் 30—6—1980 வரை ரூ. 2,43,37,308.19 செலவிடப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூபாய் 2½ கோடி அளவிலே அறநிலையத் துறையிலேயிருந்து இதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கு ஏற்ற வகையிலே இந்து அறநிலையத் துறையின் நன்கொடைகள் மூலம், அறக்கட்டளைகள் நடத்தப்படுகின்றன. அந்த நிதி மூலம் சமுகநலப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதற்கான விவரங்கள் வெளி உலகிற்குத் தெரிகின்ற அளவிலே முறையாக விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிறுவனங்களைப்பற்றி ஆங்காங்கே உள்ள அந்தக் கல்வி நிறுவனங்கள், மற்ற ஆதாவு இல்லங்கள், அன்பு